ஆண்டு பட்டிகை வழக்கு எண்.1/2023

## DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case No CC.No. 1/2023 LW 9 PW- 8

| | |
|---|---|
| Name | : பாண்டியன் (புலன் விசாரணை அதிகாரி) |
| Father's/Husband's Name | : தங்கவேல் |
| Village | : சார்பு ஆய்வாளர் |
| Taluk | : தாடிக்கொம்பு காவல்நிலையம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 26th day of February 2026

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 1:35 P.M. – 2.30 P.M.

1 முதல் 7 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**(சாட்சிக்கு காணொளி காட்சி வாயிலாக சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1) நான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், தாடிக்கொம்பு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 10.09.2019ம் தேதி 23.00 மணிக்கு நான் நத்தம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது, நத்தம், துவராபதியைச் சேர்ந்த தங்கராஜ் மகன் தங்கப்பாண்டி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று அதன் தன்மைக்கேற்ப நத்தம் காவல்நிலைய குற்ற எண். 637/2019 சட்டபிரிவுகள் 147, 148, 294(பி), 452, 323, 506(1) இ.த.ச. மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். **( முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

2) புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையின் அசலை கனம் நத்தம் நீதிமன்றத்திற்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை நான் என்னுடைய விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 11.09.2019ம் தேதி அதிகாலை 00.30 மணிக்கு சம்பவ இடமான துவராபதியில் உள்ள வாதியின் வீட்டின் முன்பு வைத்து சாட்சிகள் ராஜா மற்றும் பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு , மாதிரி வரைபடம் வரைந்து பார்வைமகஜர் தயார் செய்தேன். **(மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5 ஆகும். பார்வைமகஜர் அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) பின்னர் சாட்சிகள் தங்கப்பாண்டி, ராஜா, பழனிச்சாமி, வெள்ளையம்மாள், காந்திமதி, தங்கராஜ், தனலெட்சுமி ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கின் எதிரிகள் நல்லியப்பன் மற்றும் சுப்பிரமணி ஆகிய இருவரை 11.09.2019ம் தேதி 7.00 மணிக்கு நத்தம் பேருந்து நிலையத்தில் வைத்து காரணம் கூறி கைது செய்து தக்க வழிக் காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மற்ற எதிரிகள் திண்டுக்கல் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்று சென்றுவிட்டதால் அவர்களை கைது செய்யவில்லை.

4) பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட தங்கப்பாண்டி என்பவருக்கு சிகிச்சை அளித்த நத்தம் அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.பொன்ராஜ் என்பவரை விசாரித்து சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் இவ்வழக்கின் புலன்விசாரணையை முடித்து எதிரிகள் மீது 13.10.2019ம் தேதி மேற்சொன்ன சட்டப் பிரிவுகளின் கீழ் குற்றயிறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

5) காவல் நிலையத்திற்கு 10.09.2019 ஆம் தேதி 23.00 மணிக்கு தகவல் கிடைத்த நிலையில் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து முதல்

தகவல் அறிக்கையை பதிவு செய்ய எவ்வளவு நேரம் ஆனது என்றால் வாதிக்கு காயம்பட்டிருந்ததால் அரை மணி நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கையில் வழக்கு பதிவு செய்த நேரம் 23.00 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையானது நீதிமன்றத்திற்கு எப்போது அனுப்பப்பட்டுள்ளது என்றால் 11.09.2019ம் தேதி மாலை 7.30 மணிக்கு அனுப்பப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை காலம் 15ல் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள் 10.09.2019 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) முதல் தகவல் அறிக்கை காலம் 5ல் சம்பவம் நடந்த இடம் வாதியின் வீட்டின் முன்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை காலம் 7ல் 7 எதிரிகளின் பெயர் குறிப்பிட்டும், மற்றும் சிலர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் மனு, முதல் தகவல் அறிக்கை, சாட்சிகள் விசாரணை வாக்குமூலத்திலும் இதே விபரம்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் மருத்துவரிடம் 10 தெரிந்த நபர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் 7 நபர்கள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை, புகார் மனு ஆகியவற்றில் 7 நபர்கள் மற்றும் சிலர் என்றும், அ.த.சா.ஆ.3 விபத்து பதிவேட்டில் 10 நபர்கள் என்றும் முரண்பட்டும் வழக்கு குற்ற இறுதி அறிக்கையானது 7 நபர்கள் மீது மட்டும் தாக்கல் செய்யப்பட்டு உள்ளதால் முரண்பாடுகள் உள்ளது என்றால் சரியல்ல.

7) யார், யாருக்கிடையே சொத்து பிரச்சனை உள்ளது என்பதை குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பழனிச்சாமி, த/பெ.பெரியசாமி என்பவர் சம்பவத்திற்கு முன்பாகவே வாதி குடியிருந்த வீட்டை கிரையம் வாங்கிவிட்டார் என்ற விபரம் புலன் விசாரணையில் தெரிய வந்ததா என்றால் சிவில் பிரச்சனை என்பதால் அதை

விசாரிக்கவில்லை. ஊர் பொதுக்கூட்டம் ஆனது யார் பிராது கொடுத்தார், யார் தலைமையேற்று நடத்தினார் என்ற விபரத்தை குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

8) புகார் மனு மற்றும் புலன் விசாரணையின்படி வீட்டிற்குள் சம்பவம் நடந்ததாகதான் உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் வீட்டின் முன்பு நடந்துள்ளது. புகார் மனுவில் எதிரிகள் வீட்டிற்குள் அத்துமீறி உள் நுழைந்து 1, 2 வாதிகளை அடித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல, வீட்டிற்குள் சம்பவம் நடந்து அதன் தொடர்ச்சியாக வீட்டிற்கு வெளியேயும் சண்டை தொடர்ந்துள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் வீட்டிற்குள்ளேயும், வெளியேயும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, வீட்டு வாசல் மற்றும் அதனைத் தொடர்ந்து தட்டி வைத்து அடைக்கப்பட்டிருந்ததில் அத்துமீறி உள்ளே வந்ததால்தான் வழக்கு எழுந்துள்ளது.

9) பார்வை மகஜரில் சம்பவ இடமானது தங்கப்பாண்டி வீட்டிற்குள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் சம்பவம் வீட்டிற்குள் நடந்ததாகதான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் வீட்டின் உள்ளே எந்த பகுதியில் சம்பவம் நடைபெற்றது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வரைபடத்தில் வீட்டின் அமைப்பு மற்றும் அதன் அளவு வீட்டின் எந்த பகுதியில் நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ஊர் பொதுக்கூட்டத்தில் தலைமை தாங்கிய நபர்களை விசாரிக்கவில்லை என்றால் சாட்சியம் அளிக்க முன் வரவில்லை. துவராபதி கிராமத்தில் மொத்தம் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் சுமார் 150 வீடுகள் இருக்கும். எதிரிகளும் அதே ஊரில் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டிற்கும், அ.சா.1, 2 வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 அல்லது 200 மீட்டர் தூரம் இருக்கும். மேற்படி வீடுகளுக்கு இடைப்பட்ட தூரத்திற்குள் உள்ள பொது மக்கள் யாரையும் சாட்சியாக விசாரணை செய்துள்ளேனா என்றால்

இல்லை, அவர்கள் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை. இவ்வழக்கின் சாட்சிகள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்த ரத்த உறவினர்கள் என்றால் சரிதான்.

10) பொதுக்கூட்டத்திற்கு சாட்சி காந்திமதியை மட்டும் அழைத்திருந்ததாகவும், அவருடன் அவரது மகன் தங்கப்பாண்டி, கணவர் தங்கராஜ் உடன் சென்றதாகவும் கூட்டத்தில் காந்திமதியை தவறாக பேசியும், தங்கப்பாண்டியோ, தங்கராஜோ எதுவுமே பேசவில்லை என்றால் சரிதான். 1வது சாட்சி எதிரிகளை காவல் நிலையத்தில் புகார் கொடுப்பேன் என்று எதிரிகளிடம் சொன்னதாக எனது விசாரணையில் தெரியவரவில்லை என்றால் சரிதான். புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் 1, 2 வாதிகள் மட்டும்தான் சம்பவ இடமான வீட்டிற்குள் இருந்ததாகவோ, வேறு யாரும் வந்து விலக்கிவிட்டதாகவோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

11) 1வது சாட்சியை எதிரிகள் அடித்தபோது 2வது சாட்சி அதை தடுக்கவோ, விலக்கிவிடவோ முயற்சி எடுத்ததாக புகாரில் இல்லை என்றால் சரிதான். கம்பு என்பது அதன் தடிமன் மற்றும் அளவை பொறுத்து தடி மற்றும் உருட்டுக்கட்டை ஆகியவற்றிலிருந்து மாறுபட்டது என்றால் சரிதான். கம்பின் நீளம் மற்றும் பருமன் குறித்து குற்றஇறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், வழக்கு சொத்து கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரிதான். 1, 2 வாதிகளை அடித்தபோது கம்போ, தடியோ கொண்டு அவரது உடம்பில் எந்தெந்த இடத்தில் அடித்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.1ற்கு வலது கை, முதுகு ஆகியவற்றில் எந்த பகுதியில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். குற்றயிறுதி அறிக்கையில் அ.சா.2ற்கு ஊமைக்காயம் ஏற்பட்டுள்ளது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

12) அ.சா.1ற்கு மருத்துவ நமுனா கொடுத்தேனா என்றால் இல்லை. அ.சா.2ற்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என்பதால் தான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1ற்கு சொல்லிய

விதத்தில் காயங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 சம்பவத்தன்று மருத்துவமனைக்கு செல்லாமல் மறுநாள் 11.09.2019ம் தேதி 3.10 மணிக்கு சென்றுள்ளார் என்றால் சரிதான். அவருக்கு வலி மட்டுமே இருப்பதாக தான் சொல்லி சிகிச்சை எடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வலி என்பது வெறும் உணர்வுபூர்வமானது என்பதால் வழக்கிற்காக வலியை மட்டும் காட்டி சிகிச்சை எடுத்துக்கொண்டது போன்று ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

13) முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சாட்சியங்களின் வாக்குமூலங்கள் பெற்று குற்றஇறுதியறிக்கை நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ராஜா மற்றும் காந்திமதி காவல் நிலையத்தில் வைத்து சாட்சியாக எந்த கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்து எதுவும் கூட்டப்படவில்லை என்றால் சரியல்ல. 1, 2 வாதிகளை எதிரிகள் அடித்து காயப்படுத்தவில்லை என்றால் சரியல்ல. முன்விரோதம் காரணமாக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

Co-Ordinater @ Court Point
(Sathishmani, Junior Assistant)

Co-Ordinater @ Remote Point                                        Witness

மேற்படி சாட்சியத்தை, காணொளி காட்சி வாயிலாக சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சாட்சி மற்றும் இரு தரப்பு வழக்கறிஞர்கள் ஆகியோருக்கு நேரடியாக Share Option மூலமாக சரிபார்க்க பதிவு செய்யப்பட்டது. அதனை சாட்சிக்கு ஈ–மெயில் மூலமாக படித்துப்பார்க்க அனுப்பப்பட்டு, அவர் சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்து நீதிமன்றத்திற்கு மீண்டும் தபால் மூலமாக அனுப்பி வைத்தார்.

J.Aafreen Begum
Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.26 16:43:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்